இந்து தமிழ் திசை

# பிரதமர் மோடி புதுச்சேரி வருகை ஆளுநருடன் முதல்வர் ஆலோசனை

புதுச்சேரி

பிரதமர் மோடி புதுச்சேரி வருகை தர இருப்பது தொடர்பாக ஆளுநர் கைலாஷ்நாதனுடன் முதல்வர் ரங்கசாமி ஆலோசனை நடத்தினார். பல ஆயிரம் கோடியில் புதிய திட்டங்கள் அறிவிக்க இருப்பது தொடர்பாகவும் ஆளுநரும் முதல்வரும் விவாதித்தனர்.

தமிழகம், கேரளம், அசாம், மேற்கு வங்கம் மற்றும் புதுவை உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கான தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. தமிழகம் மற்றும் புதுவைக்கான தேர்தல் நாள் மார்ச் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும் என தெரிகிறது.

தேர்தல் நடைபெறும் மாநிலங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அரசு முறை பயணமாக செல்கிறார். மேலும் அந்த மாநிலங்களில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பல ஆயிரம் கோடிகளில் அறிவிக்கிறார்.

அதன் ஒரு பகுதியாக, வரும் மார்ச் 13-ம் தேதி மதியம் பிரதமர் மோடி புதுச்சேரிக்கு வருகிறார். அன்றைய தினம் லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில் அவர் பங்கேற்று, பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அறிவித்து நலத்திட்டங்கள் வழங்கி பேசுகிறார்.

பிரதமருக்கு பிரமாண்ட வரவேற்பு தரும் வகையில் மாநில பாஜக தயாராகி வருகிறது.

பிரதமர் வருகை குறித்த ஆலோசனைக்கூட்டம் துணை நிலை ஆளுநர் மாளிகையில் நேற்று நடந்தது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் தலைமை வகித்தார்.

முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், பாஜக மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, மாநில பாஜக தலைவர் வி.பி. ராமலிங்கம், எம்எல்ஏ கல்யாணசுந்தரம், தலைமைச்செயலர் சரத் சவுகான் மற்றும் அரசு துறை செயலர்கள் , உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பிரதமர் வருகையின் போது புதுவையில் அறிவிக்கப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

குறிப்பாக சேதராப்பட்டில் 50 ஏக்கரில் ரூ. 1,100 கோடியில் ஜிப்மர் மருத்துவமனையின் மேம்பட்ட விபத்து சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம் கட்ட அறிவிப்பை வெளியிடுகிறார். புதுச்சேரி முழுக்க 30 ஆண்டுகளுக்கு மேலாக பழமையான குடிநீர் குழாய்களை அகற்றிவிட்டு புதிய குழாய்களை பதிக்கும் திட்டம், விமான நிலைய விரிவாக்கம், கல்லூரிகள் மறுசீரமைப்பு, உப்பளம் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் செயற்கை ஓடுதளபாதை மற்றும் நீச்சல் குளம் திறப்பு உள்ளிட்ட திட்டங்கள் தொடங்குவது மற்றும் திறப்பு குறித்து அறிவிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

பிரதமர் வருகையிலன்போது பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஆராய்ந்தனர்.

பிரதமர் வருகையொட்டி புதுச்சேரியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது. லாஸ்பேட்டையில் விழா மேடை அமைக்கும் பணியும் நடந்து வருகிறது.

## காவல்துறையினர் ஆலோசனை

பிரதமரின் வருகையொட்டி டிஜஜி சத்தியசுந்தரம் தலைமையில் எஸ்எஸ்பிக்கள், எஸ்பிக்களுடன் லாஸ்பேட்டை ஏர்போர்ட் மைதானத்தில் ஆலோசனை நடத்தினர்.

இதுதொடர்பாக காவல்துறை வட்டாரங்களில் கேட்ட போது, "பிரதமர் வருகைக்காக 2.31 லட்சம் சதுர அடியில் 50 ஆயிரம் இருக்கைகளுடன் மேடை அமைக்கும் பணி இப்பகுதியில் நடக்கிறது. வாகனங்கள் நிறுத்தும் வசதிக்காக 12 இடங்களை தேர்வு செய்துள்ளோம்" என்று தெரிவித்தனர்.

பிரதமர் வருகையையொட்டி மார்ச் 1-ம் தேதி, புதுச்சேரியில் ட்ரோன்கள் பறக்க தடை விதித்து, மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் உத்தர விட்டுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
25.2.2026 (புதன்கிழமை)

### பிரதமர் மோடி 1-ந்தேதி புதுவை வருகை:

# கவர்னர் கைலாஷ்நாதன், முதல்-அமைச்சர் ரங்கசாமி ஆலோசனை

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

புதுச்சேரி, பிப்.25-

பிரதமர் மோடி வருகிற 1-ந்தேதி புதுவைக்கு வருகை தர உள்ளார். இதையொட்டி கவர்னர், முதல்-அமைச்சர் நேற்று தீவிர ஆலோசனை நடத்தினர். புதுச்சேரியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானத்தில் பந்தல் அமைக்கும் பணி மும்முரமாக நடந்து வருவதை படத்தில் காணலாம்.

### பிரதமர் மோடி வருகை

புதுச்சேரி, தமிழகம், கேரளா, அசாம், மேற்கு வங்கம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு மார்ச் மாதம் 2-வது வாரத்தில் வெளியாகும் என கூறப்படுகிறது. இந்த நிலையில் தேர்தல் நடைபெறும் மாநிலங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி சென்று பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அறிவிக்க உள்ளார்.

அதன்படி வருகிற 1-ந்தேதி பிரதமர் மோடி புதுவைக்கு வருகை தர உள்ளார். லாஸ்பேட்டை விமான நிலையம் முன்பு உள்ள ஹெலிபேட் மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொண்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அறிவித்து நலத்திட்டங்களை வழங்கி பேசுகிறார். பிரதமருக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்க பா.ஜனதாவினர் தயாராகி வருகின்றனர்.

### ஆலோசனை கூட்டம்

பிரதமர் வருகை குறித்த ஆலோசனை கூட்டம் நேற்று காலை கவர்னர் மாளிகையில் நடந்தது. கூட்டத்திற்கு கவர்னர் கைலாஷ்நாதன் தலைமை தாங்கினார். இதில் முதல்-அமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், பா.ஜனதா மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., தலைமைச் செயலாளர் சரத் சவுகான், போலீஸ் டி.ஜி.பி. ஷாலினிசிங் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பிரதமர் மோடி வருகையின் போது புதுவையில் அறிவிக்கப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. சேதராப்பட்டில் 50 ஏக்கரில் ரூ.1,100 கோடியில் ஜிப்மர் மருத்துவமனையின் மேம்பட்ட விபத்து சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம், புதுச்சேரி முழுவதும் 30 ஆண்டுகளுக்கு மேலான பழைய குடிநீர் குழாய்களை அகற்றி புதிய குழாய்கள் பதிக்கும் திட்டம், விமான நிலைய விரிவாக்கம், கல்லூரிகள் மறுசீரமைப்பு, உப்பளம் இந்திரா காந்தி விளையாட்டு அரங்கில் செயற்கை ஓடுதள பாதை மற்றும் நீச்சல் குளம் திறப்பு உள்ளிட்ட திட்டங்கள் தொடங்குவது மற்றும் திறப்பு குறித்து அறிவிப்பது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

### பாதுகாப்பு ஏற்பாடுகள்

பிரதமர் மோடியின் வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதுகுறித்து டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் போலீஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

விழா நடைபெற உள்ள இடத்தில் பிரமாண்ட பந்தல் மற்றும் மேடை அமைக்கும் பணி இரவு, பகலாக நடந்து வருகிறது. அங்கு ஆயுதம் தாங்கிய போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுமக்கள் அந்த பகுதியில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. விழா நடைபெறும் மைதானம் முழுவதும் போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

தினகரன்
பிப்ரவரி 25, 2026 புதன்கிழமை

# 1ம் தேதி பிரதமர் புதுவை வருகை ஆளுநர், முதல்வர் ஆலோசனை

புதுச்சேரி, பிப். 25: பிரதமர் மோடி வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆளுநர், முதல்வர், அமைச்சர், அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் லோக் நிவாசில் நடந்தது. தமிழகம் மற்றும் புதுவைக்கான சட்டசபை தேர்தல் மார்ச் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும் என தெரிகிறது.

தேர்தல் நடைபெறும் மாநிலங்களுக்கு பிரதமர் மோடி அரசு முறை பயணமாக செல்கிறார். இதுபோல புதுச்சேரிக்கு வரும் 1ம் தேதி பிரதமர் மோடி வருகிறார். அன்றைய தினம் லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில், பங்கேற்று பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அறிவித்து நலத்திட்டங்கள் வழங்கி பேசுகிறார்.

பிரதமர் வருகை குறித்த ஆலோசனை கூட்டம் நேற்று லோக்நிவாசில் நடந்தது. ஆளுநர் கைலாஷ்நாதன் தலைமை தாங்கினார். முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் ஏம்பலம் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம். லட்சுமி நாராயணன், பாஜ மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, மாநில பாஜ தலைவர் வி.பி. ராமலிங்கம், கல்யாணசுந்தரம் எம்எல்ஏ, தலைமைச் செயலர் சரத்சவுகான், டிஜிபி ஷாலின்சிங் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பிரதமர் வருகையின்போது புதுச்சேரியில் அறிவிக்கப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. சேதராப்பட்டில் 50 ஏக்கரில் ரூ.1100 கோடியில் ஜிப்மர் மருத்துவமனையின் மேம்பட்ட விபத்து சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம், புதுச்சேரி முழுவதும் 30 ஆண்டுகளுக்கு மேலாக பழமையான குழாய்களை அகற்றி புதிய குழாய்களை பதிக்கும் திட்டம், விமான நிலைய விரிவாக்கம், கல்லூரிகள் மறுசீரமைப்பு, உப்பளம் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் ஓடுதளபாதை மற்றும் நீச்சல் செயற்கை குளம் திறப்பு உள்ளிட்ட திட்டங்கள் தொடங்குவது மற்றும் திறப்பு மற்றும் அறிவிப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. ஒன்றரை மணி நேரத்துக்கு மேலாக இந்த ஆலோசனை நடந்தது.

### டிரோன்கள் பறக்க தடை

கலெக்டர் குலோத்துங்கன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: பிரதமர் வருகையையொட்டி மார்ச் 1ம் தேதி புதுவை, உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டிரோன், பலூன்கள் உள்ளிட்ட வான்வழி சாதனங்கள் பறக்க தடைவிதிக்கப்படுகிறது. மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

தினமலர்
புதுச்சேரி | புதன் | 25.2.2026

# பிரதமர் வருகை கவர்னர் தலைமையில் ஆலோசனை

**புதுச்சேரி, பிப். 25–**

புதுச்சேரிக்கு வரும் 1ம் தேதி பிரதமர் மோடி வருகையையொட்டி, முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், கவர்னர் தலைமையில் நடந்தது.

புதுச்சேரி, தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் வரும் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான அறிவிப்பு ஓரிரு வாரங்களில் வெளியாக உள்ளது. அதனையொட்டி, அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி உள்ளன. ஆளும் அரசுகள் நலத்திட்ட உதவிகளை வேகமாக செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக பிரதமர் மோடி, தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் அரசுமுறை பயணமாக சென்று, பல ஆயிரம் கோடிகளில் வளர்ச்சி பணிகள்ளை அறிவித்து வருகிறார்.

அதன்படி, வரும் மார்ச் 1ம் தேதி அரசுமுறை பயணமாக புதுச்சேரிக்கு வருகை தரும் பிரதமர் மோடி, லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானத்தில் நடைபெறும் விழாவில், பங்கேற்கிறார். விழாவில், சேதராப்பட்டில் 50 ஏக்கரில் ரூ.1,100 கோடி செலவில் ஜிப்மர் மருத்துவமனையின் மேம்பட்ட விபத்து சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம், விமான நிலைய விரிவாக்கம், உப்பளம் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் அமைத்துள்ள செயற்கை ஓடுதளம், எல்லைப்பிள்ளைச்சாவடியில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல்குளம், 100 அடி உயர கொடிக்கம்பம் என ரூ.5,000 கோடி மதிப்புள்ள நலத்திட்டங்களை துவக்கி வைக்க உள்ளார்.

புதுச்சேரிக்கு வருகை தரும் பிரதமருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க மாநில பா.ஜ., விரிவான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இந்நிலையில், பிரதமர் வருகை குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று லோக்நிவாசில் நடந்தது. கவர்னர் கைலாஷ்நாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் எம்பலம் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், பா.ஜ., மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, பா.ஜ., மாநில தலைவர் ராமலிங்கம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., தலைமை செயலர் சரத்சவுகான், டி.ஜி.பி., ஷாலினி சிங் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பிரதமர் வருகையின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள், அரசு விழாவில் பிரதமரால் அறிவிக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.